(6 pages) **Reg. No. :** ....

Code No. : 32161 **Sub. Code : GMTA 31/ GMTC 31**

B.A.(CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2013

Third Semester

Tamil — Main

சமய இலக்கியம்

(For those who joined in July 2012 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. திருக்குற்றால ஈசர் விரும்பும் மலர் எது என்று சம்மந்தர் கூறுகின்றார்

(அ) கொன்றை மலர் (ஆ) மல்லிகை மலர்

(இ) ரோஜா மலர் (ஈ) முல்லை மலர்.

2. 'சாத்திரங்கள் பல பேசும் சழக்கர்கள்' இதில் சழக்கர்கள் என்பதன் பொருள் என்ன?

(அ) அறிவற்றவர்கள் (ஆ) அறிவாளிகள்

(இ) கெட்டவர்கள் (ஈ) நல்லவர்கள்.

3. உந்தி சென்று மலையை எடுத்தவன் என்று நாவுக்கரசர் யாரைக் குறிப்பிடுகின்றார்

(அ) அனுமன் (ஆ) இராவணன்

(இ) வாலி (ஈ) அகத்தியர்.

4. ஆர்வம் உடையவர் காண்பர்

(அ) இணையடி (ஆ) அரன்தன்னை

(இ) பவந்தன்னை (ஈ) அகலிடம்.

5. அன்பெனும் பிடியுள் அகப்படும் மணி என்று இறைவனை புகழ்பவர்

(அ) திருமூலர் (ஆ) மாணிக்கவாசகர்

(இ) சுந்தரர் (ஈ) நாவுக்கரசர்.

6. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்

(அ) ஔவையார் (ஆ) புனிதவதியார்

(இ) வெள்ளிவீதியார் (ஈ) மந்தாகினியார்.

7. தென்குருகூர்ச் சடகோபன்

(அ) நம்மாழ்வார் (ஆ) பெரியாழ்வார்

(இ) திருமங்கையாழ்வார் (ஈ) திருமால்.

8. கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ-இப்பாடலில் கூறப்பட்டுள்ள பூவின் பெயர்

(அ) கொன்றை (ஆ) குவளை

(இ) தாமரை (ஈ) ரோஜா.

Nesamony Memorial Christian College, Marthandam

9. நீலபதி தன் வயிற்றில் தோன்றியவன்

(அ) மாடலன் (ஆ) கோவலன்

(இ) உதயகுமாரன் (ஈ) இராகுலன்.

10. பெண்ணாசையினைக் குணங்குடி மஸ்தான் எதனோடு உருவகிக்கின்றார்

(அ) பேய் (ஆ) துன்பம்

(இ) நோய் (ஈ) பாவி.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

11. (அ) கூதன்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம் என்று சம்மந்தர் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) சாத்திரம் பேசித்திரிபவர்களின் செயல்களாக நாவுக்கரசர் கூறுவன யாவை?

12. (அ) வெப்பு நோயோடு பிற நோய்களையும் நீக்கிய இறைவனின் பெருமைகளாக சுந்தரர் பாடுவதனை எழுதுக.

(அல்லது)

(ஆ) "ஐயனே அரனே என்று அரற்றினால் உய்யலாம் உலகத்தவர்" என்று நாவுக்கரசர் கூறுவன யாவை?

13. (அ) அன்பு செய்பவர்க்கே இன்பநிலை கிடைக்கும் எனும் திருமூலரின் கூற்றினை எழுதுக.

(அல்லது)

(ஆ) எப்போது பிறவித் துன்பம் நீங்கும் என்று காரைக்கால் அம்மையார் புலம்புவதனை விளக்குக.

14. (அ) நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் என்று திருமங்கையாழ்வார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) நம்மாழ்வார் திருமாலைப் போற்றிக் கூறுவனவற்றை எழுதுக.

15. (அ) காமத்தின் தீமை பற்றி மணிமேகலை அரசமாதேவியிடம் கூறியது யாது?

(அல்லது)

(ஆ) ஞானம் குறித்து திட்டூர் தேசிகரின் கருத்தைப் புலப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 650 சொற்களில் விடையளிக்க.

16. (அ) குறும்பலா ஈசன் வீற்றிருக்கும் நன்னகரத்தின் பெருமைகளாக சம்மந்தர் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இறைவனின் செயல்களாக நாவுக்கரசர் கருத்தினைப் புலப்படுத்துக.

Nesamony Memorial Christian College, Marthandam

17. (அ) மாணிக்கவாசகர் தாம் யாரைக் கண்டால் அஞ்சுவதாகக் கூறுகின்றார்?

(அல்லது)

(ஆ) இறைவனை அன்பால் ஆளலாம் என்று திருமூலர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. (அ) பாஞ்சசன்னியத்தின் பெருமைகளாக ஆண்டாள் கூறுவனவற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) துஞ்சும் போது அழைமின் துயர்வரின் நினைமின் என்று திருமங்கையாழ்வார் கூறுவதனை எடுத்துரைக்க.

19. (அ) மண்ணுலகில் வாழும் மக்கள் ஐம்பெருங்குற்றங்களைக் கைவிட வேண்டும் என்று மணிமேகலை கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) சீவகனுக்குச் சாரணர் கூறிய நிலையாமை பற்றியக் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

20. (அ) பரம பிதாவின் அன்பை என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும் என திட்டூர் தேசிகர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) குணங்குடி மஸ்தான் சாகிப்பின் 'தவமே பெற வேண்டுமெனல்' என்ற தலைப்பில் கூறியுள்ள செய்திகளை விளக்குக.

Nesamony Memorial Christian College, Marthandam